**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 2010**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1. அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் அபிப்பிராயம் தெரிவிக்க முடியாதுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் (இ.க.நி)**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்கீட்டுத் தவறுகளைச் செம்மையாக்குவதற்காக செய்வதற்காக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் உரிய ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை செம்மையாக்கல்களுக்குப் பதிலாக முன்னைய ஆண்டுகளுக்கான செம்மையாக்கங்களாக இனங்காணப்பட்ட ரூபா 31,846,758 தொகையான வரவு மற்றும் ரூபா 31,085,990 தொகையான செலவு மீதிகளை ஒன்றுக்கொன்று எதிரீடு செய்து தேறிய பெறுமதியாகிய ரூபா 760,768 மீளாய்வாண்டின் போது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த முன்னைய ஆண்டுகளுக்கான செம்மையாக்கல்கள் நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்துக்களை மீள் மதிப்புச் செய்தல் சம்பந்தமாக இ.க.நி. இலக்கம் 18 இற்கு இணக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(i) 41 ஆம் பந்தி :-

ரூபா 8,085,836,773 தொகையான மீள்மதிப்பு ஒதுக்கத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்காக தேறிய மிகைகளை நிறுத்திவைத்த உழைப்புக்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 77 ஆம் பந்தி :-

மீளாய்வாண்டின் போது காணிகளின் பெறுமதியினை ரூபா 5,797,800 ஆல் அதிகரித்து அதனை மீள்மதிப்பு ஒதுக்கமாக நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் முன்னைய ஆண்டிற்கான நிலையான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்யும் போது இடம்பெற்ற தவறுகளை நடைமுறை ஆண்டின் போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) குறைத்துக்காட்டல்களும் அதிகரித்துக்காட்டல்களும்

(i) தொலைக் கல்வியினை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் மூலம் 2004 - 2010 காலப்பகுதியின் போது ரூபா 2,348,752,669 தொகையான நிலையான சொத்துக்கள் நன்கொடையாக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,320,454,170 தொகையான நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்படாததன் காரணமாக நிலையான சொத்துக்களும் மானியமும் அத்தொகைகளினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன.

(ii) முதலீட்டு வருமானங்களின் வட்டி சரியாகக் கணிப்பிடாததன் காரணமாக 06 முதலீடுகளுக்கான வட்டி ரூபா 6,851 ஆல் குறைத்தும் 14 முதலீடுகளுக்கான வட்டி ரூபா 211,157 ஆல் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(iii) ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஏற்பாட்டினைத் திட்டமிடும் போது 05 ஆண்டுகளுக்குக் குறைந்த சேவைக்காலத்தைக் கொண்ட ஊழியர்களுக்காக ஏற்பாட்டினை மேற்கொண்டிராததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 5,135,218 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்**

---------------------------------------------------------

(i) நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிடம் ஒன்றின் கட்டிட விண்ணப்பத்தினை அங்கீகரிக்கப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 720,000 தொகையான சேவைக் கட்டணத்தினை நடைமுறை வேலையாகப் பதியப்படுவதற்குப் பதிலாக நாவல தலைமை அலுவலகக் கட்டடங்களின் கீழ் கட்டிடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2010 ஆம ஆண்டின் போது நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த பரீட்சை மண்டபத்தின் II ஆம் கட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 61,755,419 தொகையான செலவு நடைமுறை வேலையாகக் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான கட்டிடப் பெறுமானத்தேய்வு ரூபா 3,087,771 ஆல் குறைத்து கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

**1.2.3 இணக்கஞ்செய்யப்படாத வேறுபாடுகள்**

-----------------------------------------------------------------

திறந்த பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆங்கில பட்டபின்படிப்பு நிறுவனத்திலிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 335,520 ஆக இருந்த போதிலும் அந் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தவேண்டிய மீதி ரூபா 261,810 ஆக இருந்தது. ரூபா 73,710 தொகையான வேறுபாட்டினை இணக்கம் செய்து கணக்குகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2009 இன் 9 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டத்தின் 02(1)(இ) பிரிவு | மீளாய்வாண்டின் போது நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ரூபா 37,425,452 தொகையான கற்கை நெறி கட்டண வருமானம் மற்றும் ரூபா 2,276,328 தொகையான குறுங்கால கற்கைநெறி மற்றும் நடைமுறைப் பயிற்சிக்கான பெறுவனவுகளை கவனத்தில் எடுத்துக்கொள்ளாததன் காரணமாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 1,290,308 கூட்டுத்தொகையான வரி குறைத்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2003 யூன் 22 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வரைவு ஆண்டறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 139 மற்றும் 261 | காசேட்டின் பிரகாரம் 02 வங்கி நடைமுறைக் கணக்குகளின் மீதிகளுக்கு மிகையாக ரூபா 1,810,850 |

| | | |
|---|---|---|
| | | கூட்டுமொத்தமான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) | நி.பி 371(2) (ஆ) | 1. மீளாய்வாண்டின் முதல் அரையாண்டில் 73 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 இற்கு மேற்பட்ட குறித்த விடயத்திற்கான கட்டுநிதியாக ரூபா 4,212,989 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 32 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணங்களின் பெறுமதி ரூபா 50,000 இலிருந்து ரூபா 500,000 வரையாக இருந்தது.<br><br>2. உரிய முறைப்படி மதிப்பீடுகளைத் தயாரிக்காததன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணங்ளில் 50% இற்கு மேற்பட்ட அளவு சேமிக்கப்பட்டிருந்தமை, முற்பணங்களைத் தீர்த்துவைத்தலில் நீண்டகாலத் தாமதங்கள், ஏற்கெனவே வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணங்கள் வழங்கப்படல் ஆகிய விடயங்களின் காரணமாக முற்பணங்கள் தொடர்பாகக் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாகக் காணப்பட்டது. |
| (iii) | நி.பி 570 மற்றும் 571 | ரூபா 31,527,719 தொகையான 2 ஆண்டுகளுக்கு மிகையான வைப்புக்கள் தெடர்பாக அரை ஆண்டு அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் அவற்றினை தீர்த்துவைப்பதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு |

| | | |
|---|---|---|
| | | எடுத்துக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 1645 | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 25 வாகனங்கள் தொடர்பாக முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் சம்பவக் குறிப்புப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XXVI ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு மற்றும் நி.பி 757 (இ)(2) | நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் 879 ஆம் இலக்க சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பராமரிப்பு பிரிவின் வேலையாட்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம், நுட்பமான வேலையாட்களுக்கு ரூபா 800 மற்றும் நுட்பமற்ற வேலையாட்களுக்கு ரூபா 600 ஆக நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மார்ச் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான 06 மாத காலத்திற்கு ரூபா 144,824 தொகை வேலையாட்கள் சம்பளமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதியப் பங்களிப்பு பணத்தினை கணிக்கும் போது கல்விசார் படிகளை கவனத்தில் கொள்ளலாகாது என வரவுசெலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகத்தினால் 2003 யூலை 18 ஆந் திகதிய பீடீ/ஜஎன்எஸ்/சீ/எல்என்ஏ/078 ஆம் இலக்க கடிதத்தில் காட்டப்பட்டிருந்தும் அந்த படிகளுக்காகவும் பங்களிப்பு பணத்தினை கணித்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,877,358 தொகை மேலதிகமாகச் செலுத்தவேண்டி இருந்தது.

(இ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க திறைசேரியின் அரசாங்க முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் மற்றும் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு விலாசமிடப்பட்ட பீடீ/பீஈ1/174/11 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக மீளாய்வாண்டின் போது இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிப் படியாக ரூபா 1,163,755 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கு பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைவு ரூபா 254,632,295 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 335,769,254 ஆக இருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது நிதிசார் விளைவுகளில் ரூபா 81,136,959 ஆல் முன்னேற்றம் ஒன்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்தச் செலவு ரூபா 97,951,034 ஆல் அதிகரித்திருந்தமையும் கற்கைநெறி வருமானமும் ரூபா 153,420,309 ஆல் அதிகரித்திருந்தமையும் இதற்கு பிரதான காரணமாக இருந்தன.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் 04 கல்விப்பிரிவுகளின் மூலம் 56 கற்கை நெறிகள் நடாத்தப்பட்டுவருகின்ற போதிலும் களுத்துறை கல்வி நிலையத்தில் இதில் 04 கற்கை நெறிகள் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் பதிவுசெய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 240 ஆகும்.

(ஆ) திறந்த பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு கல்விப் பிரிவின் கீழ் வருடாந்தம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கற்கைநெறி/ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை வழங்கும் கால அட்டவணை வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படாத 17 கற்கைநெறிகள்/ நிழ்ச்சித்திட்டங்களும் விண்ணப்பப் படிவங்களை வழங்கும் கால அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கும் மேலாக குறிப்பிடத்தக்க அளவில் தாமதமடைந்த 14 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(இ) கற்கை நெறிகளுக்காக மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கு எழுத்துமூல பரீட்சைகளை நடாத்தும் போது விற்பனை செய்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கையினைக் கவனத்தில் கொள்ளாது விற்பனை செய்வதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களின் பிரகாரம் பரீட்சை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தியதன் காரணமாக அதற்காக விளைவற்ற செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

(ஈ) பிராந்திய கல்வி நிலையங்களில் பரீட்சை விடைத் தாள்கள், மிகுதியான வினாத்தாள்கள் என்பவற்றினை மிகவிரைவாக மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இரத்தினபுரி, களுத்துறை ஆகிய கல்வி நிலையங்களில் விடைத்தாள்கள் மற்றும் எஞ்சிய வினாத்தாள்களை அனுப்புவதற்கு ஒப்படைப்பதற்காக முறையே 05 நாட்களிலிருந்து 09 நாட்கள் வரையும் மற்றும் 05 நாட்களிலிருந்து 06 நாட்கள் வரையுமான காலம் எடுத்திருந்தது.

(உ) 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்விப் (நாடகமும் மேடைக்கூத்தும்) பட்டப்படிப்பு மீளாய்வாண்டு வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பட்டப்படிப்பு டவர் கலையரங்கு மன்றத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற நாடகமும் மேடைக்கூத்தும் உயர் டிப்ளோமா கற்கை நெறியில் சித்தியடைந்தவர்களைச் சேர்த்துக்கொள்வதனை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அந்த டிப்ளோமாவில் சித்தியடைந்த 02 குழுக்கள் இந்த பட்டப்படிப்பிற்காக பதிவு செய்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றன என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2006-2010 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமும் 2010 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தேவைப்பாட்டின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

2010 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கு 141 செயற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 77 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 18 செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் போதியளவில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 15 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அச்சகத்தில் லிதோ அச்சிடல் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காக மூன்று லிதோ நிபுணர்கள் இருந்த போதிலும் அச்செயற்பாடுகள் பணம் செலுத்தி வெளியிலிருந்து நிறைவேற்றப்பட்டதன் காரணமாக அவர்களுக்கு வருடாந்த சம்பளம் மற்றும் சீவனோபாய படிகளாகச் செலுத்தப்பட்ட ரூபா 1.25 மில்லியன் விளைவற்ற செலவாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) அச்சிடல் நடவடிக்கைகளுக்காக லிதோ அச்சிடல் நிபுணர்களின் சேவையை செயற்திறனாகப் பயன்படுத்தாது ரிஸோ இயந்திரத்தினைப் பயன்படுத்துதல், புத்தகங்களைக் கட்டுவதற்காக தாள்களை ஒன்றுசேர்ப்பதற்கு இயந்திரம் ஒன்று இருக்கையில் அதனைப் பயன்படுத்தாமை முதலிய காரணங்களினால் அச்சகத்தில் மேலதிகநேர வேலை, துண்டு வீதி கொடுப்பனவு என்பவற்றிற்கு அதிகளவு பணம் செலவு செய்யப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்கு அச்சகத்தில் மேலதிக நேரவேலை மற்றும் துண்டுவீத கொடுப்பனவிற்காகச் செலவிடப்பட்ட பணம் ரூபா 6,486,611 ஆக இருந்ததுடன் மதிப்பிடப்பட்ட பணம் ரூபா 2,555,000 ஆக இருந்தது. 2009 ஆம் ஆண்டிற்காக மேற்கூறிய செலவு ரூபா 3,881,065 ஆகவும் மதிப்பீடு

ரூபா 2,000,000 ஆகவும் இருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கு அச்சகத்தின் மேலதிகநேர வேலைச் செலவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 67% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது.

(இ) நிலையான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்யும் செயற்பாடு தொழில்சார் நிலையில் இடம்பெறாதிருந்தும் நிலையான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்தல், நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரித்தல் என்பவற்றிற்கான ஒப்பந்தத்தில் நிறுத்திவைக்கப்பட்ட பணமான ரூபா 139,500 தொகை உரிய ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) நிதிசார் கட்டுப்பாடு**

(i) தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 04 சந்தர்ப்பங்களில் அவ்வப்போது கிடைக்கப்பெற்ற ரூபா 6,772,854 தொகையில் ரூபா 6,647,654 தொகை அதாவது 98.2% எதுவித செயற்திறனான நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) ரூபா 114,884,209 கூட்டுமொத்தமான 151 நானாவித நிதியங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த மற்றும் கைவிடப்பட்ட கணக்குகளின் மீதியினை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1. 15 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த மீதிகளை உள்ளடக்கிய ரூபா 88,695 தொகையான தீர்த்துவைக்கப்படாத சில்லறைக் காசு கட்டுநிதி மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை

எடுக்கப்படாது மிகுதிப் பணமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

2. பல்கலைக்கழகத்தின் அனுராபுரம், களுத்துறை, வவுனியா ஆகிய கல்வி நிலையங்களிலும் தலைமை அலுவலகத்தின் சில பிரிவுகளிலும் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய சில்லறைக் காசேடு பேணப்படாமை, சில்லறைக்காசு உறுதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படாமை, செலவுகள் மீள்நிரப்பப்படாமை, செலவு எல்லைகளை விஞ்சிய சில்லறைக் காசிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்படல், பாதுகாப்புபணம் வைத்திருக்கப்படாமை ஆகிய குறைபாடுகளின் காரணமாக அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாகக் காணப்பட்டது.

**(ஆ) கணனி அறிவினை வழங்குதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்**

மீளாய்வாண்டிலும் கணனி அறிவினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக "MS Office 2003 பெக்கேஜ்" பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதுவரையில் வழங்கப்பட்டிருந்த "MS Office 2007" பெக்கேஜினை அதற்காக பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பரீட்சை மண்டபம் (II ஆம் கட்டம்) நிர்மாணித்தல்

(i) பரீட்சை மண்டபம் (II ஆம் கட்டம்) நிர்மாணித்தல் ஒப்பந்தத்தினை வழங்கும் போது தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு இருக்கவேண்டிய ஆகக்குறைந்த தகமையான கடந்த 5 ஆண்டுகளில் பூர்த்திசெய்த ஒப்பந்தங்களின் பெறுமதியின் வருடாந்தச் சராசரி ரூபா 41 மில்லியனாக இருக்கவேண்டிமைக்கும் வைத்திருக்கவேண்டிய ஆகக்குறைந்த நடைமுறைச் சொத்துக்கள் அல்லது கடன் வசதிகளின் அளவு ரூபா 07 மில்லியனாக இருக்கவேண்டியமைக்குமான தேவைப்பாடு பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் சிவில் பொறியியலாளர், மேற்பார்வையாளர் (சிவில்) மற்றும் கணிய அளவீட்டாளர் ஆகிய பதவியணியினரின் தகமைகளும் அனுபவங்களும் உரிய

நிபந்தனைகளுடன் இணங்கியுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 1. ஒப்பந்தம் தொடர்பாக ஒரு ஆண்டு பராமரிப்புக் காலத்தினை உள்ளடக்கும் வகையில் செயலாற்றல் முறி ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிணை முறியில் 02 மாதங்கள் 20 நாட்கள் மாத்திரதே உள்ளடக்கப்பட்டிருந்தன.

2. ஒப்பந்தப் பெறுமதியில் 10% இற்கு மிகையான பெறுமதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய காப்புறுதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 27,976,559 பெறுமதியான 10 ஆய்வுகூட உபகரணங்களும் பெறுமதியினை சரியாக மதிப்பீடு செய்வதற்கான தகவல்கள் இல்லாத கணித மற்றும் கணனி ஆய்வு கூடத்தின் போட்டோ பிரதி இயந்திரமும் அலுவலக உபகரணங்களும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) களுத்துறை கல்வி நிலையத்திற்கு வழங்கப்பட்ட கணனி, ஆய்வுகூடம், கேட்போர்கூடம், கேள்வி, பார்வைப் பிரிவு 37 அலுவலக உபகரணங்கள் மின்பிறப்பாக்கி இயந்திரம் என்பனவும் இரத்தினபுரி கல்வி நிலையத்திற்கு வழங்கப்பட்ட டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரம், 03 தொலைக்காட்சி பெட்டிகள், தண்ணீர் மோட்டார் ஒன்று என்பனவும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(இ) பல்கலைக்கழகத்தின் தற்காலிக விடுதியிலுள்ள 22 உபகரணங்களின் செயற்படாமலும் 36 உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையிலும் காணப்பட்டன.

### 2.2.5 இனங்காணப்பட்ட நட்டம்

புலமைப்பரிசிலுக்காக வெளிநாடு சென்ற 06 விரிவுரையாளர்கள் உடன்படிக்கையினை மீறியதன் காரணத்தினால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,664,190 கூட்டுமொத்தமான பணத்தினை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கையை மீறிய திகதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் வழக்குத்தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அப்பணத்தினை பல்கலைக்கழகத்தினால் அறவிட்டுக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.2.6 பதவியணியினர்

பிராந்திய கல்வி நிலையங்கள் மற்றும் கல்வி நிலையங்களின் நடவடிக்கைகள் போதியளவான வேலைப் பகிர்வு மற்றும் பொறுப்புக்களுடன் பேணப்படுவதற்கு போதியளவு பதவியணியினர் இல்லாமையின் காரணமாக முகாமைத்துவ உதவியாளர் அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் வேலையாட்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமையும் மேற்பார்வை செய்யாமையும், நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய நிதி மற்றும் ஏனைய சொத்துக்களுக்குப் பொறுப்பான நடவடிக்கை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை எழுத்து மூலம் வேலை ஒப்படைக்கப்படாது வாய்மொழி மூலம் வேலை ஒப்படைக்கப்பட்டமை, உத்தியோகத்தர்களின் சொந்த வங்கிக் கணக்குகளுக்கு காசோலைகள் வழங்கல் மற்றும் பல உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் ஒரு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்படல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்கான வருமானக் கணக்குகள் மற்றும் பாதீட்டின் பிரகாரம் வருமானம் உழைக்கின்ற வாகனக்கூலி மற்றும் ஏனைய நிதி மூலங்களின் வருமானம் எனும் விடயத்தின் கீழ் வருமானத்தினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் வருமான மதிப்பீடு தயாரிக்கப்படும் போது கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடு ஒன்று

மீளாய்வாண்டின் போது ரூபா 854,612 தொகை வருமானத்தினை உழைத்திருந்த குறுகியகால கற்கைநெறி வருமானம் முழுமையாகத் தவிர்க்கப்பட்டிருந்தமை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் திறந்த பல்கலைக்கழகம் உழைத்த உள்ளக வருமானம், மதிப்பிடப்பட்ட வருமானங்களின் அளவினைவிட 51% ஆல் மிகைத்திருந்தது. 2009 ஆம் ஆண்டில் அது 27% ஆலும் 2008 ஆம் ஆண்டில் 45% ஆலும் மதிப்பிடப்பட்ட வருமானத்தினை மிகைத்திருந்ததுடன் உள்ளக வருமானத்தினை குறைத்து மதிப்பீடு செய்தல் வழக்கமாக இடம் பெற்றிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) அச்சகத்தில் களஞ்சிய கட்டுப்பாடு
(ஈ) பராமரிப்பு பிரிவிற்கு வெளிவேலையாட்களை ஈடுபடுத்தல்
(உ) கற்கைநெறி கையேட்டினை பகிர்ந்தளித்தல்
(ஊ) கற்கைநெறி விண்ணப்பப் படிவங்களை விற்பனை செய்தல்
(எ) தற்காலிக விடுதிகளுக்கு வசதிகளை வழங்குதல்